செய்தி வெளியீடு எண்: 02 நாள்: 02.02.2018

**தேனி மாவட்டம்,**
**பதிவு செய்யப்படாத பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள்**
**உடனடியாக பதிவு செய்திட வேண்டும்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு:-**

*****

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.02.2018) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பதிவு செய்யப்படாத பெண்கள், குழந்தைகள் தங்கும் விடுதிகள், மதம் சார்ந்த நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் மகளிருக்கான தங்கும் விடுதிகள், குழந்தைகள் விடுதிகள் உடனடியாக மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பதிவு செய்திட வேண்டும் என விடுதிகளை நடத்துபவர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழக அரசின் உத்தரவின்படி, மத்திய, மாநில அரசு மான்யம் பெறும் பெண்கள் தங்கும் விடுதிகள், பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகள், மதம் சார்ந்த விடுதிகள், அரசு அல்லது தனியார் மகளிருக்கான தங்கும் விடுதிகள், குழந்தைகள் விடுதிகள் அரசு அனுமதி பெற்று ஒழுங்குமுறை சட்டம்-2014 மற்றும் விதிகள்-2015ன் கீழ் செயல்பட வேண்டும். விடுதிகளில் தங்கியிருக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு போதுமான இடவசதியுடன் 18-வயது நிரம்பியவர்களுக்கு ஒரு நபருக்கு 120 சதுர அடியும், குழந்தைகளுக்கு 40 சதுர அடியும், 50 நபர்கள் தங்கயிருக்கும் விடுதியில் 10 நபர்களுக்கு ஒரு கழிப்பறை, 10 நபர்களுக்கு ஒரு குளியலறை, மருத்துவம் மற்றும் முதலுதவி அறை, போதுமான பணியாளர்களுடன் சமையலறை மற்றும் இடவசதியுடன் கூடிய உணவு அருந்தும் கூடம், மனமகிழ் கூடம், தீயணைப்பு உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், நூலகம் போதுமான வசதிகள், நற்சான்றிதழ் பெற்ற காவலர் பணியாளர்களை கொண்டு விடுதிகள் அமைக்கப்பட வேண்டும்

பதிவு சான்று பெற சம்பந்தப்பட்ட விடுதி நடத்துபவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பெயரில் ரூ.3,000/-க்கான வரைவோலை எடுத்து, பொதுப்பணித்துறையின் கட்டட உறுதிச்சான்றுகளான ஏ.பி.சி படிவம், வட்டாட்சியரிடமிருந்து இடவசதி சான்றான டி படிவம், தீயணைப்பு மீட்புப்பணிகள் துறையிடமிருந்து வழங்கப்பட்ட தடையில்லா சான்று, சுகாதார துறையினரால் வழங்கப்படும் சுகாதார சான்று, சங்கப்பதிவு சட்டம் அல்லது அறக்கட்டளை பதிவு சட்டத்தின் கீழ் செய்யப்பட்டு, தணிக்கை அறிக்கை, விடுதிகளில் பணிபுரிகின்ற பணியாளர்களின் கல்வித்தகுதி, ஊதியம் குறித்து புகைப்படத்துடனும், ஆண்டறிக்கையுடன் விடுதியினை நடத்துபவர்கள் மாவட்ட சமூக நல அலுவலரிடம் சமர்ப்பித்திட வேண்டும்.

மாவட்ட சமூக நல அலுவலர் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது மாவட்ட சமூக நல அலுவலர் அல்லது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் அல்லது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு), வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் ஆகியோரால் நடவடிக்கை மேற்கொண்டு 20 நாட்களுக்குள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விடுதிகள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். எனவே, பதிவு செய்யப்படாத பெண்கள், குழந்தைகள் தங்கும் விடுதிகள், மதம் சார்ந்த நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் மகளிருக்கான தங்கும் விடுதிகள், குழந்தைகள் விடுதிகள் உடனடியாக பதிவு செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.செ.உமையாள் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு.ரவிச்சந்திரன் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் திருமதி.செ.இராஜராஜேஸ்வரி அவர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் முனைவர்.பா.சத்தியராயணன் அவர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் விடுதிகள் நடத்துபவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**